ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மரணம்: ஓ.பி.எஸ். எடப்பாடி பழனிசாமி இரங்கல்

சென்னை, ஆக. 1–

வேலூர் ஒன்றியம் பூதூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பி.குமார் மரணமடைந்தார்.

இது சம்பந்தமாக அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதல்வருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும், முதல்வருமான எடப்பாடி பழனிசாமி ஆகியோர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

'வேலூர் மேற்கு மாவட்டம், வேலூர் ஒன்றியம், பூதூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பி.குமார் மாரடைப்பால் மரணமடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு வருத்தமுற்றோம்.

அன்புச் சகோதரர் குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்'.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூறியுள்ளனர்.

சென்னை ஆர்.கே.நகர் பகுதியில் 11 மின் திருட்டு கண்டுபிடிப்பு: ரூ.5 லட்சம் அபராதம் வசூல்

சென்னை, ஆக 1–

சென்னை தண்டையார்பேட்டை மற்றும் ஆர்.கே. நகர் பகுதியில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு இழப்பீட்டுத் தொகையாக ரூ. 5 லட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

26.7.18 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சென்னை அமலாக்க கோட்டத்தின் சென்னை மையம், சென்னை வடக்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் அமலாக்க அதிகாரிகள், சென்னை வடக்கு மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட தண்டையார்பேட்டை மற்றும் ஆர்.கே. நகர் பகுதியில் கூட்டு ஆய்வு மேற்கொண்ட போது 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் ரூ.4 லட்சத்து 52 ஆயிரத்து 849 இழப்பீட்டு தொகையாக மின் நுகர்வோருக்கு விதிக்கப்பட்டது.

மேலும் சம்பந்தப்பட்ட மின் நுகர்வோர்கள் குற்றவியல் நடவடிக்கையை தவிர்க்க கூடுதலாக சமரசத் தொகை ரூ.48 ஆயிரம் செலுத்தியதால் அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. மின் திருட்டு சம்பந்தமான தகவல்களை செயற்பொறியாளர், அமலாக்கம், சென்னை கைபேசி 9445857591 என்ற எண்ணில் தெரிவிக்கலாம்.

சத்தீஸ்கர் மாணவி ஜனாதிபதிக்கு பாடம்

ராய்ப்பூர், ஆக. 1–

சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த பள்ளிச் சிறுமி ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்குப் பாடம் எடுத்துள்ளார்.

தத்வாவாடா மாவட்டத்தில் உள்ள ஜாவாங்காவில் உள்ள ஸ்ரீ அடல் பிஹாரி வாஜ்பாய் கல்வி நகர வளாகத்தில் உள்ள ஆஸ்தா வித்யா மந்திரில் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவி சந்தியா நேதாம் என்ற சிறுமி, நக்சல் பாதிக்கப்பட்ட தண்டேவாடா பகுதியில் வசித்து வருகிறார்.

நக்சல் படையினர் நடத்திய தாக்குதலில் தந்தையை இழந்த சந்தியா நேதாம், குடும்பச் சுமையை ஏற்றுக்கொண்டு படித்துக்கொண்டே டியூசன் எடுத்து வருகிறார். சந்தியா நேதாம்மின் இந்தத் திறமைக்கு சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் ரமன் சிங், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு, அறிவியல் பாடத்தை சந்தியா நேதாம் நடத்தியுள்ளார். சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர் ரமன் சிங், அம்மாநில கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை தலைமைச் செயலகத்தில், ஈரோடு Association of All Textile Processors சங்கத்தின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். தென்னரசு செயலாளர் எஸ்.ஏ. சண்முகசுந்தரம், பொருளாளர் ஆர். முருகானந்தம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். இந்த சந்திப்பின் போது அமைச்சர்கள் கே.ஏ. செங்கோட்டையன், பி.தங்கமணி, கே.சி. கருப்பணன், சட்டமன்ற உறுப்பினர் கே.வி. ராமலிங்கம் ஆகியோர் உள்ளனர்.

கூட்டுறவு சங்க தேர்தல் முடிவுகள் நாளை வெளியிடப்படும்

கூட்டுறவு சங்க தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை, ஆக. 1–

கூட்டுறவு சங்க தேர்தல் முடிவுகள் நாளை (2–ந்தேதி வெளியிடப்படும் என்று கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

கூட்டுறவு தேர்தலின் 5 ஆண்டு பதவிக்காலம் கடந்த ஏப்ரல் மாதம் முடிவடைந்தது. தொடக்கச் சங்கங்கள், மத்திய சங்கங்கள், தலைமைச் சங்கங்கள் என மூன்றடுக்கு முறையினை அனுசரித்து 18,775 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5 கட்டங்களாக தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் திட்டம் வகுத்தது. முதல் அடுக்கில் வரும் 18,465 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதற்கட்டத்தில் 12.3.2018 முதல் 7.5.2018 வரை 4 நிலைகளாக தேர்தல் நடத்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அறிவிப்பின் அடிப்படையில் 4 நிலைகளிலும் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்நிலையில் அனைத்து தேர்தல் நடவடிக்கைகளும் உள்ளது உள்ளபடியே நிறுத்த வேண்டும் என்ற சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வின் 9.4.2018 நாளிட்ட ஆணைக்கிணங்க அனைத்து தேர்தல் நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட்டன. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் மேல் முறையீடு செய்ததின்பேரில் உச்ச நீதிமன்றம் மதுரை அமர்வின் சென்னை உயர்நீதிமன்ற இடைக்கால தடையினை விலக்கி வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவு அறிவித்தல் தவிர்த்த இதர அனைத்து தேர்தல் நடவடிக்கைகளையும் நடத்திட ஆணை பிறப்பித்தது.

அதனடிப்படையில் அனைத்து தேர்தல் நடவடிக்கைகளையும் ஆணையம் மீண்டும் தொடர்ந்து நடத்தி முடித்தது. வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவுகள் மட்டும் அறிவிக்கப்படவில்லை. உச்ச நீதிமன்றம் வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு திரும்ப அனுப்பியது.

உயர்நீதிமன்றம் உத்தரவு

நிறுத்தப்பட்டிருந்த வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவுகள் அறிவித்தல் ஆகியவற்றின் மீதான தடையினை விலக்கி தேர்தல் முடிவுகளை அறிவிக்கலாம் என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று ஆணையிட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ள சங்கங்களுக்கு மட்டும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கக் கூடாது என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புகார்கள், சட்ட ஒழுங்கு மற்றும் இதர காரணங்களினால் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த, ரத்து செய்யப்பட்ட, ஒத்தி வைக்கப்பட்டிருந்த, பாதியில் நிறுத்தப்பட்டு, நிறுத்தப்பட்ட நிலையிலிருந்து தொடர தேர்தல் ஆணையத்தால் ஆணையிடப்பட்டுள்ள சங்கங்கள் தவிர்த்து அனைத்து சங்கங்களுக்கான தேர்தல் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு புதிய நிர்வாகக்குழு தேர்தல் முடிவுகளை உடன் அறிவித்திட அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

2.8.2018 (நாளை) அன்று 2ம் நிலையில் உள்ள சங்கங்களுக்கு தலைவர், துணைத்தலைவர் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும். 3ம், 4ம் நிலையில் உள்ள சங்கங்களுக்கு நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் முடிவுகள் 2ம் தேதி அறிவிக்கப்படும். 3 மற்றும் 4ம் நிலுவையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தலைவர், துணைத்தலைவர் தேர்தல் 6.8.2018 அன்று நடத்தப்படும்.

கூட்டுறவுச்சங்கங்களுக்கானதேர்தல் ஆணையத்தால் நிறுத்தப்பட்ட, ரத்து செய்யப்பட்ட, ஒத்தி வைக்கப்பட்ட, பாதியில் நிறுத்தப்பட்டு, நிறுத்தப்பட்ட நிலையிலிருந்து தொடர ஆணையிடப்பட்டுள்ள சங்கங்களுக்கானதேர்தல்அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

தமிழகத்திலிருந்து ஹஜ் பயணம் செய்யும் பயனாளிகளுக்கு இந்த ஆண்டு முதல் அம்மாவின் அரசு 6 கோடி ரூபாய் மானிய தொகையாக ஹஜ் பயனாளிகளுக்கு வழங்க உத்தரவிட்ட தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமியை, தமிழ்நாடு முன்னாள் வக்ப் வாரியத் தலைவரும், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற செயலாளரும், கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினருமான தமிழ்மகன் உசேன் தலைமையில், இஸ்லாமிய அமைப்புகள், ஜமா – அத்தார்கள் சந்தித்து பூச்செண்டு கொடுத்து பொன்னாடை போர்த்த நன்றி தெரிவித்தனர்.

சென்னை மாநகராட்சி பகுதியில்

ரூ.10 லட்சம் மதிப்பில் 8.5 டன் எடை பிளாஸ்டிக் பறிமுதல்

ஆணையாளர் அதிரடி நடவடிக்கை

சென்னை , ஆக 1–

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் –5க்கு உட்பட்ட பகுதியில் சுமார் ரூ.10 லட்சம் மதிப்பிலான 8.5 டன் எடை கொண்ட பிளாஸ்டிக் சென்னை மாநகராட்சி ஆணையாளர் தா.கார்த்திகேயனின் உத்தரவின்படி பறிமுதல் செய்யப்பட்டது.

மத்திய அரசின் பிளாஸ்டிக் கையாளுதல் மற்றும் மேலாண்மை விதிகள் 2016ன் படி 50 மைக்ரான் தடிமனுக்கு கீழுள்ள பயன்பாட்டு பிளாஸ்டிக் பைகள் தயாரித்தல், கொண்டு செல்லுதல், இருப்பு வைத்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துவதற்கு முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி ஆணையரின் ஆணைக்கிணங்க சென்னை மாநகராட்சி மண்டலம் 5 க்குட்பட்ட பகுதியிலுள்ள பிளாஸ்டிக் மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள் ஆகியோர்களுக்கு கடந்த 19.7.2018 அன்று பிளாஸ்டிக் கையாளுதல் மற்றும் மேலாண்மை விதிகள் குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் 50 மைக்ரான் தடிமனுக்கும் கீழுலுள்ள பிளாஸ்டிக் பைகள் மற்றும் இதர பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்த கூடாது என அறிவுறுத்தப்பட்டன. அதன் அடிப்படையில் கூடுதல் மாநகர நலஅலுவலர்கள் தலைமையில் கோட்டம்–57, வ.உ.சி. சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் அமைந்துள்ள ஏ1 மாதேஸ்வரா டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்ட போது தடை செய்யப்பட்ட 50 மைக்ரான் தடிமனுக்கும் கீழுள்ள பிளாஸ்டிக் பை கட்டுகள் 142 எண்ணிக்கைகள் பறிமுதல் செய்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவையனைத்தும் 20 முதல் 30 மைக்ரான் தடிமன் மட்டுமே உள்ளது எனவும் ஆனால், லேபிளில் 51 மைக்ரான் என சீலிடப்பட்டது எனவும், கண்டறியப்பட்டது. உடனே 8.5 டன் எடை கொண்ட ரூ. 10 லட்சம் மதிப்பிலான 142 கட்டுகள் கொண்ட பிளாஸ்டிக் பைகள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5 சுகாதாரத்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் வியாபாரிகள் 50 மைக்ரான் தடிமனுக்கு கீழுள்ள பிளாஸ்டிக்கள் விற்பனை மற்றும் பயன்படுத்துதல் கூடாது என சென்னை மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி பேரன் கோபாலகிருஷ்ண காந்திக்கு ராஜீவ் விருது; ரூ.10 லட்சம் பரிசு

புதுடெல்லி, ஆக.1

மகாத்மா காந்தியின் பேரனான கோபாலகிருஷ்ண காந்தி, ராஜீவ்காந்தி விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு ரூ.10 லட்சம் பரிசும் வழங்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சி சார்பில் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் பெயரில் 1995ம் ஆண்டு முதல் தேசிய விருது வழங்கப்பட்டு வருகிறது. சமூக நல்லிணக்கம், அமைதி, வன்முறைக்கு எதிராக போராடுதல் ஆகியவற்றில் சிறப்பாக சேவையாற்றுவோருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

2018ம் ஆண்டுக்கான இவ்விருதுக்கு மகாத்மா காந்தியின் பேரனும், மேற்கு வங்காள மாநில முன்னாள் கவர்னருமான 73 வயது கோபாலகிருஷ்ண காந்தி தேர்வு செய்யப்பட்டு உள்ளார். அவருக்கு விருதுடன் பாராட்டு சான்றிதழ் மற்றும் ரூ.10 லட்சம் பரிசு ஆகியவையும் வழங்கப்படுகிறது.

இவ்விருதை பெறும் 24வது பிரமுகர். கடந்த ஆண்டு நடந்த துணை ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பாக போட்டியிட்டவர்.

டெல்லியில் உள்ள ஜவகர் பவனில் வருகிற 20ந்தேதி நடைபெறும் சிறப்பு விழாவில் கோபாலகிருஷ்ணா காந்தி விருதை பெற்றுக் கொள்வார்.

மேற்கண்ட தகவலை விருதுக்கான ஆலோசனை குழுவின் செயலாளர் தெரிவித்தார்.

சமூக நல்லிணக்கத்துக்கான ராஜீவ்காந்தி விருதை அன்னை தெரசா, உஸ்தாத் பிஸ்மில்லா கான், சுனில் தத், லதா மங்கேஷ்கர், கே.ஆர். நாராயணன், சுவாமி அக்னிவேஷ் உள்ளிட்டோர் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடி, மேனாம்பேடு, மேலூர், கொடுங்கையூர் பகுதிகளில் நாளை மின்தடை

சென்னை, ஆக. 1–

சென்னையில் நாளை (2ந் தேதி) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் வாரிய பராமரிப்புப் பணி காரணமாக கீழ்கண்ட இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும்.

மாலை 4 மணிக்குப்பின் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

பாடி பகுதி : கென்னால் ரோடு, பாலாஜி தெரு, டி.ஆர்.ஜே மருத்துவமனை முதல் செந்தில் நகர் வரை, ரங்கா கார்டன், சீயாத்தமன் நகர், வனசக்தி நகர், முருகன் கோயில் தெரு, வனசக்தி நகர் விரிவு, திருமலை நகர், விவேகானந்தா சாலை, உசேன் காலனி, பாரத் ராஜீவ்காந்தி நகர்.

மேனாம்பேடு பகுதி : கங்கை நகர், செங்குட்டுவன் நகர், ஓரகடம், சந்திரசேகரபுரம், ஞானமூர்த்தி நகர், கருக்கு, விஜயலட்சுமிபுரம், பானு நகர், புதூர், செங்குன்றம் ஒரு பகுதி, கள்ளிக்குப்பம், மேனாம்பேடு, பிரிதிவிபாக்கம்.

மேலூர் பகுதி : மீஞ்சூர் டவுன் முழுவதும், சீமாவரம், பிடிஓ அலுவலகம், மேலூர், பட்டமந்திரி, வல்லூர், அத்திப்பட்டு, கவுண்டர்பாளையம், சுப்பா ரெட்டிபாளையம், பள்ளிபுரம்.

கொடுங்கையூர் பகுதி : முத்தமிழ் நகர் 1,4,6,8 வது பிளாக், டி.எச். ரோடு, காவேரி சாலை, யுனியன் சாலை, முத்துமாரி அம்மன் கோயில் தெரு, பார்த்தசாரதி ரெட்டி தெரு.

இத்தகவலை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தெரிவித்துள்ளது.

பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்

L32200TN1994PLCO26958

பதிவு அலுவலகம்: சிட்டி சென்டர் பிளாசா, 3வது தளம் அறை எண். 7/48, அண்ணா சாலை,சென்னை–600 002. Tel: (91) - 7042292838, Email: manager.roc@5core.in, Website: www.fivecoreexim.com

அறிவிப்பு

செப்டம்பர் 7, 2016 முதல் அமுலுக்கு வந்துள்ளபடி, கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 124 (6) மற்றும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திருப்பியளித்தல்) விதிகள் 2016ன்படி, இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இதர விஷயங்களுக்கிடையே விதிகளின்படி, தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக பங்குதாரர்களால் டிவிடெண்ட் கோரப்படாத அல்லது செலுத்தப்படாத அனைத்து பங்குகளும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி(ஐஇபிஎப்)க்கு மாற்றப்படும்.

அதன்படி, ஐஇபிஎப் மற்றும் ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள டிவிடெண்ட் செலுத்தப்படாத மற்றும் கோரப்படாத பங்குகள் குறித்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு தனித்தனியாக அறிவிப்புகளை கம்பெனி அனுப்பி உள்ளது.

எனவே, 2010–11 நிதி ஆண்டிலிருந்து கடந்த 7 ஆண்டுகளாக டிவிடெண்ட் செலுத்தப்படாத அல்லது கோரப்படாத அனைத்து பங்குகளும் ஐஇபிஎப் மற்றும் ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்படும்.

அந்த பங்குதாரர்கள் மற்றும் ஐஇபிஎப்–பிற்கு மாற்றப்பட உள்ள பங்குகள் குறித்த முழு விவரங்களை அதன் இணையதளம் –http://www.fivecoreexim.comல் கம்பெனி பதிவேற்றம் செய்துள்ளது. ஐஇபிஎப்–பிற்கு மாற்றப்பட உள்ள பங்குகள் மற்றும் பணமாக பெறாத டிவிடெண்டுகள் பற்றிய விவரங்களை இணையதளத்தில் சரிபார்த்துக் கொள்ளுமாறு பங்குதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஐஇபிஎப்–பிற்கு மாற்றப்பட்டுள்ள, பங்குகள் மீது சேர்ந்துள்ள அனைத்து பலன்கள் உள்பட பங்குகள் மற்றும் கோரப்படாத டிவிடெண்ட் ஆகியவற்றை விதிகளில் கண்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஐஇபிஎப் ஆணையத்திடமிருந்து திரும்பக் கோரி பெறலாம் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

விதிகளின்படி ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றுவதற்காக, மாற்று பங்கு சான்றிதழ்களை கம்பெனி வழங்கும் என்பதை தாள் வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் மற்றும் ஐஇபிஎப் சஸ்பென்ஸ் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளை வைத்துள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு மாற்று பங்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதால், அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அசல் பங்கு சான்றிதழ்கள் தானாகவே ரத்தாகிவிடும் மற்றும் வர்த்தகம் மேற்கொள்ள முடியாது.

அக்டோபர் 30, 2018க்குள் சமபங்குகள் விஷயத்தில் பங்குதாரர்களிடமிருந்து செல்லத்தக்க கோரிக்கை கம்பெனியினால் பெறப்படாதபட்சத்தில், விதிகளை பின்பற்றி, விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின்படி ஐஇபிஎப்–பிற்கு செலுத்தப்படாத மற்றும் கோரப்படாத டிவிடெண்ட் மற்றும் பங்குகள் மாற்றப்படும். ஐஇபிஎப்–க்கு மாற்றப்பட்ட சமபங்குகள் மற்றும் கோரப்படாத டிவிடெண்ட் தொகை பற்றி கம்பெனியிடம் கோர முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு சந்தேகம் ஏதேனும் இருப்பின், அது குறித்து கம்பெனியின் கார்ப்பரேட் அலுவலகம், டபிள்யூஇசட்–15பி/1, அறை எண். 203–204, உக்கர்செயின் மார்க்கெட், அசோக் நகர், திலக் நகர், புதுடெல்லி–100 018 அல்லது கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் பீட்டல் பைனான்ஸ் அண்ட் கம்ப்யூட்டர் சர்வீஸ் (பி) லிட., பீட்டல் ஹவுஸ், 3வது தளம், 99, மடாங்கிர், லோகல் ஷாப்பிங் சென்டர் பின்புறம், தாதா ஹர்சுக்தாஸ் மந்திர், புதுடெல்லி–100 062. தொலைபேசி எண். 011 29961281, e-mail beetalrta@gmail.comல் அணுகலாம்.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஒப்பம்
திருமதி. சுரிந்தர் கவுர் கல்ரா
நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
தேதி: 30.07.2018

மகேந்திரா ஹாலிடேஸ் & ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்

பதிவு அலுவலகம்: மகேந்திரா டவர்ஸ், 2வது தளம், 17/18, பட்டுல்லாஸ் சாலை, சென்னை–600 002. Tel: +91 44 3988 1000, Fax: +91 44 3027 7778
இணையதளம்: www.clubmahindra.com
மின்னஞ்சல்: investors@mahindraholidays.com
சிஐஎன்:L55101TN1996PLCO36595

அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் பட்டியலிடும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன், விதிமுறைகள் 29 மற்றும் விதி 47 ஆகியவற்றின்படி நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் குறைந்த மதிப்பாய்வு செய்யப்பட்டு 30 ஜூன், 2018–ம் தேதி அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் வழங்க நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு கூட்டம் முதலில் திட்டமிடப்பட்ட வியாழக்கிழமை, 2 ஆகஸ்ட், 2018 தேதி அன்று நடைபெறாமல் மீண்டும் வியாழக்கிழமை, 9 ஆகஸ்ட் 2018 அன்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளத்திலும் (www.bseindia.com), நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளத்திலும் (www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணைய தளம் www.clubmahindra.com ஆகியவற்றில் பெறக்கூடும்.

மகேந்திரா ஹாலிடேஸ் & ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
அகிலா பாலசந்தர்
தலைமை நிதி அதிகாரி

இடம் : மும்பை
தேதி : 31 ஜூலை, 2018

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய சென்னை–600 082, அகரம், கோபால் காலனி, 3வது குறுக்கு தெரு, கதவு நெ.27/14ல் வசிக்கும் திரு.முகமது யாகூப் அவர்களின் குமாரர் திரு. M.முகமது காசீம் சார்பில் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எனது கட்சிக்காரருக்கு சொந்தமான திண்டுக்கல் பதிவு மாவட்டம், கன்னிவாடி உப–பதிவு மாவட்டம், கசவணம்பட்டி கிராமம், பட்டா எண்.4236, புதிய சர்வே எண்.240/1ல் அடங்கிய 1 ஏக்கர் 25 சென்ட்க்கான கன்னிவாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திர எண்.507/2015ன் அசல் கிரையப் பத்திரம் 05.07.2018ந் தேதி திரு.வி.க. நகர் பேருந்து நிலையத்திலிருந்து டான்போஸ்கோ பள்ளிக்குச் செல்லும் வழியில் அருகில் காணாமல் போய்விட்டது. இந்த பத்திரம் யாரிடமாவது இருந்தால் அதனை மேற்படி விலாசத்தில் வசிக்கும் எனது கட்சிக்காரருக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

T. சாமமூர்த்தி, வழக்கறிஞர்
நெ.9, லா சேம்பர்ஸ், உயர்நீதிமன்றம்,
சென்னை–600 104. போன் : 044 2558 0894

ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட்

Redington SEAMLESS PARTNERSHIPS

பதிவு அலுவலகம்: SPL கிண்டி இல்லம், 95 மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032.
வலைதளம்: www.redingtonindia.com | மின்-அஞ்சல்: investors@redington.co.in
CIN: L52599TN1961PLC028758
போர்டு எண்: +91-44-42243353 | ஃபேக்ஸ் எண்: +91-44-22253799

ஜூன் 30, 2018-உடன் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை ரூ. கோடியில்

வ. எண்	விவரங்கள்	ஒருங்கிணைந்தவை		
		முடிந்த காலாண்டு ஜூன் 30, 2018 தணிக்கை செய்யப்படாதது	முடிந்த ஆண்டு மார்ச் 31, 2018 தணிக்கை செய்யப்பட்டது	முடிந்த காலாண்டு ஜூன் 30, 2017 தணிக்கை செய்யப்படாதது
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய்	10,214.90	41,602.58	9,373.92
2.	வரிக்கு முந்தைய நிகர லாபம்	121.82	630.57	128.50
3.	காலாண்டு / வருடாந்திர நிகர லாபம்	88.64	481.64	98.37
4.	காலாண்டிற்கான விரிவான மொத்த வருவாய்	204.31	484.83	90.17
5.	பங்கு மூலதன மதிப்பு	80.03	80.03	79.97
6.	முந்தைய ஆண்டின் நிதி நிலை அறிக்கையின்படி பிற பங்குகள்	-	3,450.53	-
7	ஒரு பங்கு வருமானம் (முகமதிப்பு தலா ரூ.2/-) (காலாண்டுக்கான, ஆண்டு நிலையில் அல்லாத மதிப்பு)			
	அ. அடிப்படை (ரூ.)	2.22	12.04	2.46
	ஆ. இளகியது (ரூ.)	2.22	12.04	2.46

குறிப்புக்கள்

1. நிறுவனத்தின் தனிநிலை நிதி முடிவுகளின் சாராம்சம் ரூ. கோடியில்

வ. எண்	விவரங்கள்	தனிநிலை		
		முடிந்த காலாண்டு ஜூன் 30, 2018 தணிக்கை செய்யப்படாதது	முடிந்த ஆண்டு மார்ச் 31, 2018 தணிக்கை செய்யப்பட்டது	முடிந்த காலாண்டு ஜூன் 30, 2017 தணிக்கை செய்யப்படாதது
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய்	3,570.55	14,844.21	3,395.99
2.	இக்காலத்திற்கான, வரிக்கு முந்தைய நிகர லாபம்	41.25	271.33	60.17
3.	காலாண்டு / வருடாந்திர நிகர லாபம்	26.46	183.92	38.96

2. மேற்கண்ட சுருக்க நிதிநிலை அறிக்கை, இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (பட்டியலிடுதலுக்கான கடமைகள் மற்றும் வெளியீடுகளுக்கான தேவைகள்) நெறிமுறைகள் 2015, விதி எண் 33ன் படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான காலாண்டு நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கையின் சுருக்கமாகும். காலாண்டு நிதிநிலை முடிவுகள் தொடர்பான முழு அறிக்கை, இந்திய தேசிய பங்கு சந்தை மற்றும் மும்பை பங்கு சந்தை ஆகியவற்றின் இணைய தளங்களிலும், நிறுவனத்தின் www.redingtonindia.com என்ற இணைய தளத்திலும் உள்ளன.

3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் ஜூலை 30, 2018 அன்று தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, ஜூலை 31, 2018 அன்று நடைபெற்ற நிறுவன இயக்குநர்கள் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டவை ஆகும்.

4. நிறுவனத்தின் ஒருங்கிணைந்த மற்றும் தனிநிலை நிதி முடிவுகள் சட்டபூர்வ தணிக்கையாளர்களால் குறுகிய மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. துணை மற்றும் இணை நிறுவனங்களின் நிதிநிலை முடிவுகள் அந்தந்த சட்டபூர்வ தணிக்கையாளர்களால் குறுகிய மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இடம் : சென்னை
தேதி : ஜூலை 31, 2018

ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட் சார்பில்
ராஜ் சங்கர்
மேலாண் இயக்குனர்